# சிதபா சியாரோங் (Jiarong, Sidabao)




**வசிப்பிடம்:** சுமார் 5,500 சிதபா சியாரோங் மொழிபேசும் மக்கள் பரந்த நிலப்பரப்புடைய சிசுவான் மாநிலத்தின் வடமேற்குப் பகுதிகளில் வசிக்கின்றனர். ‘இம்மொழி பேசும் பெரும்பாலானோர் பர்கம் மாவட்டத்தின் சிதபா தாலுகாவிலுள்ள சௌதங் (Caodeng), கங்ஷன் (Kangshan) மற்றும் ஈபு (Ribu) என்ற மூன்று பட்டணங்களில் வசிக்கின்றனர் அதினால் இம்மொழியின் பெயர் சிதபா எனப்படுகிறது. இருந்தும் சில சிறிய சிதபா சமுதாயங்கள் வெகுதூரத்தில் வடக்கில் ஆபா மாவட்டத்தின் காஹா(Kehe) மற்றும் ரோங்-ஆன் (Róng'ān) பட்டணங்களுக்கு அருகில் உள்ள கிராமங்களிலும் மேற்கில் சம்தாங் மாவட்டத்தின் வுயி (Wuyi) மற்றும் ஷிலி (Shili) பட்டணங்களுக்கிடையில் துசு (Doqu) நதியோரங்களிலும் இன்னும் சிதறி சர்தர் (Serter) மாவட்டத்தில் துசு மற்றும் சர்தர் நதிகள் சங்கமமாகும் இடம்வரைக்கும் வசிக்கின்றனர். இவர்களின் சரியான மக்கள்தொகை விவரம் இல்லை, பல ஆயிரங்களாக இருக்க வாய்ப்புண்டு.’

**அடையாளம்:** இவர்களை அதிகாரப்பூர்வமாகத் திபெத்தியர்கள் பட்டியலில் சேர்த்திருந்தாலும் சியாரோங் ஒரு தனித்துவமான இனம் எனச் சீன அறிஞர்கள் பல தசாப்தங்களாக(Decades) நம்பிவருகின்றனர். சீன அறிவியல் கழகம் கி.பி. 1957ல் சியாரோங் மக்கள்தொகை 70,000 எனப் பட்டியலிட்டது. “சியாரோங் மக்கள் திபெத்திய புத்தமதத்தின் கலாச்சார வட்டத்திற்குள் உள்ளனர்; இருந்தும் தனித்தன்மையான மொழியைப் பேசுகிறார்கள்” என ஒரு மொழியியலாளர் கூறுகிறார்.

**மொழி:** சிதபா சியாரோங் மொழி திபெத்திய-பர்மிய மொழிக்குடும்பத்தின் சியங் துணைப் பிரிவைச் சேர்ந்ததாகும். இதில் ஈபு மற்றும் சௌதங் என்னும் இரண்டு முக்கிய வட்டார மொழி வழக்குகள் உள்ளன. ஈபு இன்னும் வித்தியாசமான உள்ளூர் வகைகளாகப் பிரிகிறது, உதாரணமாக சம்தாங் மாவட்டத்தில் ஷிலி , ஆபா மாவட்டத்தில் ரோங்-அன், பர்கம் மாவட்டத்தில் ஈபு மற்றும் தாவெய் (Dawei) போன்றவை ஆகும்.

**பழக்கவழக்கங்கள்:** சியாரோங் மக்கள் சீனர்கள் மற்றும் திபெத்தியர்களால் தாழ்வாகப் பார்க்கப்படுகின்றனர். ‘குறைவானப் படிப்பறிவு மட்டுமே உள்ளதால் சியாரோங் மக்கள் பட்டணங்களில் தாழ்வான வேலைகள் மட்டுமே செய்கின்றனர்”

**வரலாறு:** சியாரோங் மக்கள் திபெத்திய இனத்தின் ஒரு கிளை என்றும் இவர்கள் பண்டைக்காலத்தில் சுங்புவிலிருந்து (Qungbu) வட சிசுவான் மாநிலத்தின் சொங்பான் (Songpan) பீடபூமியில் வாழும்படி திபெத்திற்கு இடம்பெயர்ந்தார்கள் என்றும் ஒரு சீன ஆவணம் கூறுகிறது. புத்தமதம் ராஜா சொங்ஸ்சென் கம்பொவின் (Songsten Gampo – கி.பி. 605 - 650) நாள்களில் திபெத்திற்கு வந்தது. இது அதிகாரப்பூர்வமாகப் பொன் மதத்தின் இடத்தைப் பெற்றது. பின்னாட்களில் படிப்படியாகச் சியாரோங் மக்கள் இப்பொழுது வசிக்கும் பகுதியையும் சேர்த்து திபெத்தின் கடையாந்தரங்கள் வரை பரவியது.

**மதம்:** இந்நாள்களில் பழைமையான பொன் மதம் சியாரோங் மக்கள் மத்தியில் எழுச்சி அடைந்துள்ளது. கடந்த 13 நூற்றாண்டுகளாகப் புத்தமதம் பொன் மதத்தின் சடங்காச்சாரங்களுக்கு அழகு சேர்ப்பதாக மட்டுமே இருந்துவந்துள்ளது.

**கிறிஸ்துவம்:** கடந்த காலங்களில் சியாரோங் மக்களுக்குச் சுவிசேஷம் சொல்லும் முயற்சிகள் சில வெற்றிகளைச் சந்தித்தது. கி.பி. 1930 ல் மற்றுமொரு புத்தகம் இவர்கள் மத்தியில் சில விசுவாசிகள் இருப்பதாகக் காட்டியது. கி.பி. 1934 ல் மிஷனெரிகள் 34 சியாரோங் விசுவாசிகள் இருப்பதாகக் குறிப்பிட்டனர்; ஆனால் இந்நாள்களில் இவர்கள் மத்தியில் விசுவாசிகள் இருப்பதைப்போல எந்த ஒரு குறிப்புமில்லை. ‘கிறிஸ்துவத்தில் ஆர்வம் உள்ளவர்களுக்கு உண்டாகும் சமுதாயப் புறக்கணிப்பு மற்றும் லாமாக்களால் கடுமையாகச் சபிக்கப்படுவது அல்லது குடும்ப அங்கத்தினரால் விஷம் வைக்கப்படுவது போன்ற மிகக்கொடுமையான துன்புறுத்தல் ஆகியவை சுவிசேஷம் பரவுவதற்குள்ள மற்ற தடைகளாகும்.’ இவர்களுக்கு சுவிசேஷம் சொல்ல வேதாகமமோ, சுவிசேஷ ஒலிப்பதிவுகளோ அல்லது மற்ற உபகரணங்களோ இந்நாள்களில் இல்லை.




**Population:**
5,580 (2000)
6,850 (2010)
8,400 (2020)

**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** none known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Western Jiarong, Western Jyarung, Gyarong, Gyarung, Rgyarong, Chiarong, Jarong, Sidabao

**மக்கள்தொகை:** 5,580 (2000, P Hattaway)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, தன்குத்-ஷியாங், சியாரோங் மொழி

**மொழி வழக்குகள்:** 2 (Caodeng, Ribu)

**திபெத்திய புத்தமதம்:** 90%

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** இல்லை

**இயேசு திரைப்படம்:** இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு :** JIW

**கிறிஸ்துவத்தின் நிலை**

